செ.கு.எண் : 159

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 27.6.2013

உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள புனித ஸ்தலங்களுக்குச் சென்று, திடீர் வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கிக் கொண்ட யாத்திரிகர்களை மீட்பதற்காக குப்தகாசி, கேதார்நாத் ஆகிய இடங்களில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய விமானப்படை ஹெலிகாப்டர் ஒன்று கவுரிகுண்ட் என்ற இடத்தில் 25.6.2013 அன்று விபத்திற்குள்ளாகியதில் மதுரை மாவட்டம், TVS நகர், மீனாட்சி தெருவைச் சேர்ந்த ஹெலிகாப்டர் விமானி, Flight Lieutenant பிரவீண் என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளாகியதில் உயிரிழந்த ஹெலிகாப்டர் விமானி, Flight Lieutenant பிரவீண் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த திரு. பிரவீண் அவர்களின் குடும்பத்திற்கு பத்து லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9